செய்தி வெளியீடு எண்.97 நாள். 10.2.2009

# 35ஆம் இந்திய சுற்றுலா – அண்ணா நூற்றாண்டு தொழில் பொருட்காட்சிக்கு இதுவரை 12 இலட்சம் பார்வையாளர்கள் வருகை

ஆண்டுதோறும் தீவுத்திடலில் இந்தியச் சுற்றுலா–தொழில் பொருட்காட்சி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக நடத்தப்பெற்று வருகிறது. இவ்வாண்டு பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சென்னை தீவுத்திடலில் நடைபெற்றுவரும் 35–ஆம் இந்திய சுற்றுலா – அண்ணா நூற்றாண்டு தொழில் பொருட்காட்சியை 9.2.2009 (பொருட்காட்சி தொடங்கி 42–வது நாள்) வரை 12 இலட்சம் பொதுமக்கள் வருகை புரிந்துள்ளனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற பொருட்காட்சியில் 42வது நாள் வரை 7.72 இலட்சம் பார்வையாளர்கள் மட்டுமே வருகைபுரிந்தனர். கடந்த ஆண்டை ஒப்பிடும்போது இந்த ஆண்டு மேலும் 4.31 இலட்சம் பார்வையாளர்கள் கூடுதலாக இப்பொருட்காட்சியினைக் கண்டுகளித்துள்ளனர்.

இந்த ஆண்டு, பொதுமக்களைக் கவரும்வகையில் ஒவ்வொரு நாளும் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் அண்ணா திறந்தவெளி கலையரங்கில் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் நடன, நாட்டிய கலைநிகழ்ச்சிகள், பட்டிமன்றம், பாட்டுமன்றம், மேஜிக் ஷோ, திரைப்படக் கலைஞர்களின் பல்சுவை நிகழ்ச்சிகள் தினந்தோறும் நடைபெற்று வருவதால் பொதுமக்கள் அதிக அளவில் வருகை தந்து சிறப்பிக்கின்றனர். இதுமட்டுமின்றி மலையேற்றம், சறுக்குவிளையாட்டு, மதிலேற்றம், பஞ்ச் ரிங் போன்ற வீர சாகச விளையாட்டுகளும் நடத்தப்பட்டு வருவதால் இளைஞர்களும் பெருமளவில் வருகை புரிகின்றனர்.

இப்பொருட்காட்சி வருகிற மார்ச் மாதம் 11ஆம் தேதி வரை நடைபெறவிருக்கிறது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.